மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# புறநானூற்றுப் பாடல்களில் குற்றியலுகரப் பயன்பாடு

# The Use of Kuṟṟiyalukaram in Purananuru Poems

Yoges Perumal / யோகேஸ் பெருமாள்[1]
Manonmani Devi M.A.R Annamalai / மனோன்மணி தேவி அண்ணாமலை[2]

[1]Postgraduate Student, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Malaysia
[2]Associate Professor, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Malaysia

Date of Submission: 07-06-2026
Date of Acceptance: 18-06-2026
Date of Publication: 30-06-2026
Corresponding Author's Email: manonmanidevi@fbk.upsi.edu.my

**ஆய்வுச்சாரம்**

புறநானூறு பாடல்களில் இருக்கும் குற்றியலுகரப் பயன்பாட்டினைக் கண்டறிந்து அதனை விளக்குவதே இந்த ஆய்வின் நோக்கமாகும். குற்றியலுகரம் என்பது தனிநெடிலுக்குப் பிறகும் அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட எழுத்துகளுடைய சொல்லின் இறுதியிலும் வருகிற கு, சு, டு, து, பு, று என்ற வல்லின உயிர்மெய்யுடன் சேர்ந்து அரை மாத்திரை அளவு ஒலிப்பதே ஆகும். அவ்வகையில், இந்த ஆய்வில் ஆய்வாளர் குற்றியலுகரத்தில் இருக்கும் ஆறு வகையான வன்றொடர்க் குற்றியலுகரம், மென்றொடர்க் குற்றியலுகரம், இடைத்தொடர்க் குற்றியலுகரம், உயிர்த்தொடர்க் குற்றியலுகரம், ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் என இவ்வாறான அனைத்து வகைகளையும் புறநானூற்றுப் பாடல்களைச் சான்றுகளாக கொண்டும் இந்த ஆய்வில் காட்டியுள்ளார். மேலும், இந்த ஆய்வில் புறநானூறு பாடல்களில் முதல் 200 பாடல்களில் குறிப்பிட்ட சில பாடல்கள் மட்டுமே தேர்வு செய்யப்பட்டு அவற்றில் இருக்கும் குற்றியலுகர சான்றுகளை எடுத்துக்காட்டி இந்த ஆய்வில் காட்டியுள்ளார். இந்த ஆய்வானது பண்புசார் அணுகுமுறையில் கையாளப்பட்டுள்ளது. மேலும், இந்த ஆய்வில் குற்றியலுகரமும் புறநானூறும் கொண்டு நடத்தப்பட்ட முந்தைய ஆய்வுகள் சிலது தேர்வு செய்யப்பட்டு அதனின் தரவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆய்வாளர் புறநானூறு பாடல்களில் இருக்கும் குற்றியலுகரப் பயன்பாட்டினைத் தகுந்த சான்றுகளுடன் காட்டியுள்ளார். அவ்வகையில் இவ்வாய்வு புறநானூறு பாடல்களில் இருக்கும் குற்றியலுகர பயன்பாட்டினைக் கண்டறிந்துக் காட்டுவது ஆகும்.

**கருச்சொற்கள்** : புறநானூறு, குற்றியலுகரம்

**Abstract**

The purpose of this study is to identify and explain the use of Kuṟṟiyalukaram in the poems of Purananuru. Kuṟṟiyalukaram refers to the shortened pronunciation, for half a māttirai (metrical unit), of the hard consonant-vowel combinations ku, cu, ṭu, tu, pu, and ṟu when they occur after an independent long vowel or at the end of a word consisting of more than two letters. Accordingly, in this study, the researcher examines the various types of Kuṟṟiyalukaram, namely Vaṉtoṭar Kuṟṟiyalukaram, Meṉtoṭar Kuṟṟiyalukaram, Iṭaittoṭar Kuṟṟiyalukaram, Uyirtoṭar Kuṟṟiyalukaram, and Āytattoṭar Kuṟṟiyalukaram, using examples drawn from the poems of Purananuru. Furthermore, selected poems from among the first 200 poems of Purananuru were chosen for this study, and examples of Kuṟṟiyalukaram found in those poems were identified and illustrated. This study adopts a qualitative approach. In addition, several previous studies related to Kuṟṟiyalukaram and Purananuru were selected and their relevant findings and data were presented. The researcher has demonstrated the use of Kuṟṟiyalukaram in Purananuru poems with appropriate textual evidence. Thus, this study seeks to identify and illustrate the use of Kuṟṟiyalukaram in the poems of Purananuru.

**Keywords**: Purananuru, Kuṟṟiyalukaram

## முன்னுரை

தமிழ்மொழியில் ஒழுங்கு என்று அழைக்கப்படும் ஒரு பகுதி என்றால் அது இலக்கணமாகும். அப்படி இருக்கும். அப்படி தமிழ்மொழிக்கு ஆணிவேராக இருக்கும் இலக்கணம் பலராலும் புரிந்துக் கொள்ள கடினமாக இருக்கும் ஒரு பகுதியாக இருக்கிறது. இலக்கணம் என்பது ஒரு குறிப்பிட்ட பங்கினைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட ஒரு பகுதி. அப்படி இருக்கும் இலக்கணம் பல வகைகள் உண்டு. அவை, குற்றியலுகரம், முற்றியலுகரம், எச்சம், வினைமுற்று, வேற்றுமை உருபு, புணர்ச்சி விதிகள் என பலவாக அடுக்கிக் கொண்டே போகலாம். அப்படி பலவாக இருக்கும் இலக்கண பகுதியில் குறிப்பிட்டவனவற்றுள் ஒன்றுதான் குற்றியலுகரம் ஆகும். குற்றியலுகரம் என்பது குறுமை + இயல் + உகரம் > குறு + இயல் + உகரம் > குற்று + இயல் + உகரம் = குற்றியலுகரம் என்று புணர்ந்து உருவான சொல்; குறுகிய இயல்புடைய உகரம் என்பது பொருள். குற்றியலுகரம் என்பது தனிநெடிலுக்குப் பிறகும், இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துகளுடைய சொல்லின் இறுதியிலும் வல்லின மெய்களுடன் உகரம் சேர்ந்து வரும் கு, சு, டு, து, பு, று என்ற உகர ஒலிகள் அரை மாத்திரையளவே ஒலிக்கின்றன. ஆக, குற்றியலுகரம் என்பது 1 மாத்திரையை முழுமையாக கொண்டிராத உகர சொற்கள் என்பதனை உணர்த்துவதற்காக இவ்வாறு கூறப்படுகிறது. இந்த குற்றியலுகரத்தில் மொத்தம் ஆறு வகையான வகைப்பாடுகள் கொண்டிருகின்றன. ஒவ்வொன்றும் வேறுபட்ட எழுத்துகளையும் வடிவங்களையும் கொண்டுள்ளது. அவை, வன்றொடர், மென்றொடர், இடைத்தொடர், உயிர்த்தொடர், நெடிற்றொடர் மற்றும் ஆய்தத்தொடர் என்ற ஆறு வகைப்பாடுகளை ஏற்று நிற்பதே குற்றியலுகரமாகும். இந்த ஆறு வகைப்பாடுகளும் வெவ்வேறான பயன்பாடுகளைக் கொண்டிருந்தாலும் அனைத்து வகைக்கும் பொதுவாக இருப்பது இந்த கு, சு, டு, து, பு, று என்ற எழுத்துகளே ஆகும். அதனைத் தொடர்ந்து இந்த ஆய்வில் தேர்வு செய்யப்பட்ட இலக்கியம். இலக்கியம் என்பது சங்க காலம் முதல் தமிழில் அழியாத இடம் கொண்ட ஒரு காப்பியம் ஆகும். இந்த இலக்கியத்தில் அக்காலம் முதல் பல அகம் புறம் சார்ந்த கருத்துகளைத் தெளிவாக பேசியுள்ளனர். மக்களின் வாழ்க்கை முறையில் தொடங்கி போர், காதல், தலைவன், தலைவி, பாரம்பரியம், வரலாறு, பக்தி என வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துக் கூறுகளையும் இலக்கிய சான்றுகளையும் நாம் இந்த இலக்கிய நூல்களின் வழி காணலாம். அதிலும், இலக்கியம் நூல் பல உள்ளது. அவற்றில், அகநானூறு, புறநானூறு, பத்துப்பாட்டு, எட்டுதொகை, கழித்தொகை, திருக்குறள், குறுந்தொகை, நாலடியார் என இவ்வாறு அடுக்கிக் கொண்டே போகலாம். அவற்றில், இந்த ஆய்வில் தேர்வு செய்யப்பட்ட இலக்கியமாக இருப்பது புறநானூறு ஆகும். புறநானூறு மொத்தம் நானூறு பாடல்களைக் கொண்டுள்ளது. இந்த நானூறு பாடல்களும் புறத்திணைச் சார்ந்த கருத்துகளைக் கொடுக்கிறது. இந்நூலில் இருக்கும் பல்வேறு பாடல்கள் பல்வேறு கவிஞர்களால் பல்வேறு காலங்களில் எழுதப்பட்டது ஆகும். அவ்வகையில், இந்த ஆய்வில், புறநானூறு முதல் பாகமான 200 பாடல்கள் இந்த ஆய்வில் குற்றியலுகரப் பயன்பாட்டை அறிவதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளது. அவ்வகையில், புறநானூறு பாடல்களில் இருக்கும் குற்றியலுகர பயன்பாட்டைக் கண்டறிந்து அவற்றைப் பட்டியலிடுவதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

## ஆய்வு வரையறை

புறநானூற்றுப் பாடல்களில் இருக்கும் குற்றியலுகர பயன்பாட்டினைக் கண்டறிந்து அதனை குற்றியலுகர பயன்பாட்டிற்கு ஏற்றார் போல் வகைப்படுத்திக் காட்டுவதே இந்த ஆய்வின் நோக்கமாகும். இவ்வாய்வில் புறநானூறு பாடல்களை எடுத்துக்காட்டுவதால் புறநானூறு பாடல்களான முதல் 200 பாடல்கள் மட்டுமே தேர்வு செய்யப்பட்டு விளக்கப்பட்டு ஆராயப்பட்டுள்ளது.

## ஆய்விலக்கிய மீள்நோக்கு

குற்றியலுகரத்தையும் அதன் பயன்பாட்டையும் குறிக்கும் வகையில் சில ஆய்வுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. அதனில் முதல் ஆய்வான திருக்குறளில் குற்றியலுகரம் இலக்கணத்தின் பயன்பாடு-

ஓர் ஆய்வு எனும் ஆய்வு ஆகும். இந்த ஆய்வினை எழுதியவர் மனோன்மணி தேவி அண்ணாமலை, ஜெயஸ்ரீ சுப்பிரமணியம் ஆவர். இந்த ஆய்வு 2025-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஆய்வில், ஆய்வாளர்கள் திருக்குறளில் காணப்படும் ஆறு வகை குற்றியலுகரத்தைக் கொண்டும் அதற்கு ஏற்ற எடுத்துக்காட்டுகளுடனும் விளக்கியுள்ளார். இந்த ஆய்வில், ஏரக்குறைய 10-க்கும் மேற்பட்ட எடுத்துகாட்டுகளைக் காட்டியுள்ளார்.

இரண்டாவது ஆய்வான, அற்புதத் திருவந்தாதியில் குற்றியலுகர இலக்கணத்தின் பயன்பாடு-ஓர் ஆய்வு (2025). இந்த ஆய்வினை எழுதியவர் பாஸ்கரன் கிருஷ்ணன், மனோன்மணி தேவி அண்ணாமலை ஆவர். இந்த ஆய்வில் சிற்றிலக்கியமான அற்புதத் திருவந்தாதியில் இருக்கும் குற்றியலுகர பயன்பாட்டினைக் எடுத்துக்காட்டுவது இந்த ஆய்வின் நோக்கமாகும். இந்த ஆய்வில், ஆய்வாளர்கள் மொத்தம் 10 பாடல்களைத் தேர்வு செய்து அவற்றில் காணப்படும் குற்றியலுகரத்தைப் பட்டியலிட்டுள்ளனர்.

மூன்றாவது ஆய்வான, புறநானூற்றில் தொல்காப்பியத்தின் புறத்திணை ஒழுக்கங்கள் (2022). இந்த ஆய்வினை எழுதியவர் அ.முத்துசிவகாமி அவர்கள் எழுதியுள்ளார். இந்த ஆய்வில், புறத்திணை குறித்த தொல்காப்பிய நெறி, அரசர்-புலவர் உறவுநிலை, உழிஞைத் திணை, மறப்பெண்ணின்மாண்பு, வெற்றி வாகை சூடுதல், நிலையாமைக் கொள்கை, போர் நெறியிலும் அறநெறி போன்ற கருத்துகளை விளக்கி அதற்கான பாடலுடன் கூடிய சான்றுகளை எடுத்துகாட்டி விளக்கியுள்ளார். மேலும், புறநானூறு பாடல்களில் இருக்கும் கருத்துகளை ஆராய்ந்து கூறியுள்ளார்.

அடுத்த ஆய்வான, மூதுரையில் குற்றியலுகர இலக்கணத்தின் பயன்பாடு (2025). இந்த ஆய்வினை எழுதியவர் கோகிலா ஸ்ரீராமன், முனிஸ்வரன் குமார் ஆவர். இந்த ஆய்வில், மூதுரையில் காணப்படும் குற்றியலுகர வகைகளைக் கண்டறிந்துக் கூறுவது இந்த ஆய்வின் நோக்கமாக இருக்கிறது. அவ்வகையில், மூதுரையில் இருக்கும் வெண்பா பாடல்களை ஆய்வாளர் எடுத்துக்காட்டியுள்ளார்.

தொடர்ந்து, புறநானூற்றில் ஏவல், வியங்கோள் வினைச்சொற்களின் பயன்பாடு(2023). இந்த ஆய்வினை எழுதியவர் சரண் சுக்லாம், நவீன் ஆகியோர் ஆவர். இந்த ஆய்வில் புறநானூறில் இருக்கும் ஏவல், வியங்கோள் வினைச்சொற்களை அடையாளங்கண்டு அதன் பயன்பாட்டினை விளக்குவதாகும். அவ்வகையில், இந்த ஆய்வில் குறிப்பிட்ட சில பாடல்களை மட்டும் தேர்வு செய்து அவற்றில் காணப்படும் இலக்கண கூறுகளைப் பற்றி விளைக்கியுள்ளனர்.

**ஆய்வு நெறிமுறை**

இந்த ஆய்வானது பண்புசார் அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வில் புறநானூறு பாடல்களுல் முதல் 200 பாடல்கள் மட்டுமே தேர்வு செய்யப்பட்டுள்ளது. அவ்வகையில், ஔவை துரைசாமிப் பிள்ளை அவர்கள் எழுதிய புறநானூறு பாகம் 1 எனும் நூலின் துணைக்கொண்டு இந்த ஆய்வுக்கான சான்றுகளும் தரவுகளும் சேகரிக்கப்பட்டுள்ளது. அதிலும் அனைத்துப் பாடல்களையும் தேர்வு செய்யாது குற்றியலுகர வகைகள் கொண்டிருக்கும் சில பாடல்கள் மட்டும் தேர்வு செய்யப்பட்டு அவற்றில் இருக்கும் தரவுகள் விளக்கப்பட்டுள்ளது. அவ்வகையில், தரவுகள் முழுமையாக சேகரிக்கப்பட்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வுக் கண்டுபிடிப்பு**

1. வன்றொடர்க் குற்றியலுகரம்

வன்றொடர்க் குற்றியலுகரம் எனப்படுவது வல்லின எழுத்துகளான க்,ச்,ட்,த்,ப்,ற் ஆகிய ஆறு எழுத்துகளை ஏற்று நிற்கும் குற்றியலுகர வகைகள் ஆகும். எனவே, வல்லின மெய்யைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் வன்றொடர்க் குற்றியலுகரம் என குறிப்பிடப்படுகிறது. அவ்வகையில், புறநானூறு முதல் பாகத்தில் பல

எடுத்துக்காட்டுகளை முன் வைக்கலாம்.

பாடல் 2:சேரமான் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதன் (முரஞ்சியூர் முடிநாகனார்)

I. யாணர் வைப்பின் நன்னாட்டுப் பொருந

வான வரம்பனை நீயோ பெரும (வரி 11-12)

நன்னாட்டு- (ட்+ டு )- சொல்லின் ஈற்றில் குற்றியலுகர உருபு டு இருந்து அதற்கு முன் எழுத்து வல்லின உருபாக இருப்பின் இது வன்றொடர்க் குற்றியலுகரமாகும்.

II. பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்
பாஅல்புளிப்பினும் பகலிருளிலும்
நா அல்லேத நெறிதிரியினும் (வரி- 16-18)

பெருஞ்சோற்று – (ற் + று) – சொல்லின் ஈற்றில் குற்றியலுகர உருபு று இருந்து அதன் முந்தைய சொல் ற் இருப்பின் இது வன்றொடர் குற்றியலுகரமாகும்.

III. திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி

நடுக்கின்றி நிலியரோ வத்தை அடுக்கத்துச் (வரி 19-20)

அடுக்கத்து- (த் + து) எனும் சொல்லின் குற்றியலுகர உருபான து வந்து அதன் முன் எழுத்து த்-ஆக இருக்க இந்து வன்றொடர் குற்றியலுகரமாக இருக்கிறது.

பாடல் 4:சோழன் உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி (பரணர்)

IV. செஞ்ஞாயிற்றுக் கவினைமாதோ
அனையை ஆகன் மாறே
செஞ்ஞாயிற்று- (ற்+று) எனும் சொல்லின் ஈற்றில் று எனும் குற்றியலுகரம் உருபு வந்து அதன் முந்தைய சொல்லாக வல்லின எழுத்தான ற் எனும் எழுத்து வந்துள்ளதால் இது வன்றொடர்க் குற்றியலுகரம் ஆகும்.

பாடல் 6:பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி (காரிகிழார்)

V. பரிசின் மாக்கட்கு வரிசையி னல்கிப்
பணியிய ரத்தைநின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே
மாக்கட்கு- (ட்+கு) எனும் சொல்லில் கு எனும் குற்றியலுகர உருபு இருக்க அதன் முன் எழுத்து ட் எனும் வல்லின எழுத்தாக வந்துள்ளது. ஆக, இது வன்றொடர்க் குற்றியலுகரம் ஆகும்.

2. மென்றொடர்க் குற்றியலுகரம்

ஒரு சொல்லின் ஈற்று எழுத்து கு, சு, டு, து, பு, று எனும் எழுத்துகளை கொண்டு அதற்கு முன் மெல்லின எழுத்துகளான ஞ், ங், ண், ந், ம், ன் இருந்தால் அது மென்றொடர்க் குற்றியலுகரமாகும். அவ்வகையில், புறநானூறு பாடல்களில் இந்த மென்றொடர்க் குற்றியலுகரத்திற்கான எடுத்துகாட்டுகள் பல உள்ளன.

பாடல் 3- பாண்டியன் கருங்கையொள்வாட் பெரும்பெயர் வழுதி (இரும்பிடர்த் தலையார்)

VI. பெருங்கை யானை யிரும்பிடர்த் தலையிருந்து

மருந்தில் கூற்றத் தருந்தொழில் சாயாக்
கருங்கை யொள்வாட் பெரும் பெயர் வழுதி ( வரி 11-13)
தலையிருந்து- (ந் + து) எனும் சொல்லில் து எனும் குற்றியலுகர சொல் இருக்க அதன் முன் எழுத்து ந் எனும் மெல்லின எழுத்தாக இருக்கிறது. ஆக, இது மென்றொடர் குற்றியலுகரமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

VII. எருமை யன்ன கருங்கல் லிடைதோ
றானிற் பரக்கும் யானைய முன்பின்
கானக நாடனை நீயோ பெரும
நீயோ ராகலி னின்னொன்று மொழிவல் (வரி 1-4)
னின்னொன்று = (ன் + று) எனும் சொல்லில் இருக்கும் று குற்றியலுகர சொல்லாகும். அதன் முன் இருக்கும் ன் எனும் எழுத்து மெல்லின சொல்லாகும். அவ்வகையில், இவை இரண்டும் இணைந்து வரும்போது மென்றொடர்க் குற்றியலுகரமாக வகைப்படுத்தப்படுகிறது.

பாடல் 11- சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோ (பேய்மகள் இளவெயினி)

VIII. எனவாங்கு
ஒள்ளழல் புரிந்த தாமரை
வெள்ளி நாராற் பூப்பெற் றிசினே (வரி 11-13)
எனவாங்கு= (ங் + கு) எனும் சொல்லில் இருக்கும் கு என்பது குற்றியலுகர எழுத்தாகவும் ங் மெல்லின எழுத்தாகவும் இருக்க இது மென்றொடர்க் குற்றியலுகரமாகும்.

3. இடைத்தொடர்க் குற்றியலுகரம்

ஒரு சொல்லில் இருக்கும் ஈற்று எழுத்துக் குற்றியலுகர எழுத்துக்களான கு, சு, டு, து, பு, று என்ற எழுத்துகளின் முடிந்து அதன் முன் எழுத்து இடையின எழுத்துகளான ய், ர், ல், ழ், ள், வ் போன்ற எழுத்துகளில் முடியுமாயின் அது இடைத்தொடர்க் குற்றியலுகரமாகும்.

பாடல் 11- சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோ

IX. அரமயிர்த் திரண்முன்க
வாலிழை மடமங்கையர்
வருமணற் புனைபாவைக்குக்
குலவுச்சினைப் பூக்கொய்து
தண் பொருநைப் புனல்பாயும்
பூக்கொய்து – (ய் + து) எனும் சொல்லில் இருக்கும் து என்பது குற்றியலுகர எழுத்து; ய் என்பது இடையின எழுத்து. ஆக இரண்டும் சேர்ந்து வரும்போது இடைத்தொடர்க் குற்றியலுகரமாகிறது.

பாடல் 29: சோழன் நலங்கிள்ளி (திணையும் துறையு மவை. அவனை அவர் பாடியது

X. அழல்புரிந்த வடர்தாமரை
ஐதடர்ந்த நூற்பெய்து
புனைவினைப் பொலிந்த பொலனறுந் தெரியல்.... (வரி 1-3)
நூற்பெய்து- (ய்+து) எனும் சொல்லில் து குற்றியலுகரமாக இருக்க ய் எனும் எழுத்து இடையின எழுத்தாக இருக்கிறது. ஆக இது இடையின குற்றியலுகரமாகும்.

4. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்

ஒரு சொல்லில் ஈற்று எழுத்து கு, சு, டு, து, பு, று என இருந்து அதன் முன் உயிர்மெய் எழுத்து வந்தால் அது உயிர்த்தொடர் குற்றியலுகரமாகும். எடுத்துக்காட்டாக, உலகு எனும் சொல்லைப் பிரித்துப் பார்தோமானால் (உ + ல + கு) என்பதில் இருக்கும் (ல் + அ) என்பது தான் உயிர்த்தொடரின் உருபுகள் ஆகும். சொல்லில் இருக்கும் லகர சொல்லைப் பிரித்துக் காட்டும்போது அவை ல் + அ என்று புணர்கிறது. அப்படி உயிர்மெய் எழுத்தாக புணரும்போது இது உயிர்த்தொடர்க் குற்றியலுகரமாக கருதப்படுகிறது.

பாடல் 3: பாண்டியன் கருங்கையொள்வாட் பெரும்பெயர் வழுதி (இரும்பிடர்த் தலையார்)

XI. அம்புவிட வீழ்ந்தோர் வம்பப் பதுக்கைத்
திருந்துசிறை வளைவாய்ப் பருந்திருந் துயவும்
உன்ன மரத்த துன்னருங் கவலை
நின்னசை வேட்கையின் இரவலர் வருவரது ......(20-24)
வருவரது- இந்த சொல்லில் இருக்கும்
வருவரது எனும் சொல்லில் இருக்கும் ர எனும் எழுத்து (ர் + அ) என்ற சொல்லாக இருக்க இந்த சொல்லில் அ எழுத்து இருப்பதால் இது உயிர்தொடர்க் குற்றியலுகரமாக இருக்கிறது.
பாடல் 6: பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி (காரிகிழார்)

XII. சிறுகண் யானை செவ்விதி னேவிப்
பாசவற் படப்பை யாரெயில் பலதந்
தவ்வெயிற் கொண்ட செய்வுறு நன்கலம் (வரி 13-15)
செய்வுறு எனும் சொல்லில் இருக்கும் வு என்ற எழுத்தில் (வ் + உ) எனும் உகர எழுத்து இருப்பதால் இது உயிர்த்தொடர்க் குற்றியலுகரமாகும்.

XIII. வாடுக விறைவநின் கண்ணி யொன்னார்
நாடுசுடு கமழ்புகை யெறித்த லானே
செலிய ரத்தைநின் வெகுளி வாலிழை.....(வரி 21-23)
நாடுசுடு எனும் சொல்லில் இருக்கும் சு எனும் எழுத்து (ச் + உ ) என்ற உகரத்தை ஏற்று நிற்பதால் இது உயிர்த்தொடர்க் குற்றியலுகரமாக வகைப்படுத்தப்படுகிறது.

XIV. தண்டா வீகைத் தகைமாண் குடுமி
தண்கதிர் மதியம் போலவுந் தெறுசுடர்
ஒண்கதிர் ஞாயிறு போலவும்
மன்னிய பெருமநீ நிலமிசை யானே (வரி 26-29)
ஞாயிறு எனும் சொல்லில் இருக்கும் யி எனும் எழுத்து (ய் + இ) என்ற உயிரெழுத்தை ஏற்று நிற்பதால் இது உயிர்த்தொடர்க் குற்றியலுகரமாகும்.

5. நெடிற்றொடர்க் குற்றியலுகரம்

ஒரு சொல்லில் இருக்கும் ஈற்று எழுத்துக் குற்றியலுகரமாக இருக்க அதன் முந்தைய எழுத்து நெடில் எழுத்துக்களாக இருப்பின் அது நெடிற்றொடர்க் குற்றியலுகரமாகும். எடுத்துக்காட்டு, பாகு எனும் சொல்லைப் பிரித்தால் (ப் + ஆ) என்ற நெடில் எழுத்து பிறக்கிறது. இவ்வாறு இருக்க இது நெடிற்றொடர்க் குற்றியலுகரமாகும்.

பாடல் 9: பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி (நெட்டிமையார்)

XV. அறத்தாறு நுவலும் பூட்கை மறத்திற்
கொல்களிற்று மீமிசைக் கொடிவிசும்பு நிழற்றும்
எங்கோ வாழிய குடுமி தங்கோச்....... (வரி 6-8)

அறத்தாறு என்னும் சொல்லில் இருக்கும் தா எனும் சொல் (த் + ஆ) என்ற நெடில் எழுத்தை ஏற்று வந்து அதன் ஈற்று எழுத்து று எனும் குற்றியலுகர சொல்லாக இருப்பின் இது நெடிற்றொடர்க் குற்றியலுகரமாகும்.

பாடல் 13: சோழன் முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளி (உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்)

XVI. பன்மி னாப்பட் டிங்கள் போலவும்
சுறவினத் தன்ன வாளோர் மொய்ப்ப
மரீஇயோ ரறியாது மைந்துபட் டன்றே ..... ( வரி 6-9)
ரறியாது எனும் சொல்லில் இருக்கும் (ய் + ஆ) என்ற நெடில் எழுத்தைக் கொண்டு புணர்ந்துள்ளது. அவ்வகையில், இது நெடிற்றொடர்க் குற்றியலுகரமாகும்.

6. ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்

ஒரு சொல்லில் இருக்கும் ஈற்று எழுத்துக் குற்றியலுகரமாக இருப்பின் அதன் முன் எழுத்து ஃ எனும் ஆய்த எழுத்துக் கொண்டிருந்தால் அது ஆய்தத்தொடர்க் குற்றியலுகரமாகும்.

XVII. மாக்கழி மலர்ந்த நெய்த லானும்
கள்நா றும்மே கானலந் தொண்டி
அஃதெம் மூரே யவனெம் மிறைவன்
அஃதெம் மூரே = அஃது எம் மூர்
இந்த சொல்லில் ஃ எனும் இடம்பெற்று அதன் ஈற்று எழுத்து குற்றியலுகரமாக இருக்கிறது. ஆக, இது ஆய்தத்தொடர்க் குற்றியலுகரமாகும்.

XVIII. செழுங்கோட் பெண்ணைப் பழந்தொட முயலும்
வைகல் யாணர் நன்னாட்டுப் பொருநன்
எஃகுவிளங்கு தடக்கை யியறேர்ச் சென்னி (வரி 11- 13)
எஃகுவிளங்கு = எஃகு + விளங்கு
எஃகு எனும் சொல்லில் சொல்லின் ஈற்றில் கு எனும் குற்றியலுகர எழுத்து வந்து அதன் முன் எழுத்து ஃ எனும் ஆய்த எழுத்தாக இருக்க இது ஆய்தத்தொடர்க் குற்றியலுகரமாக வகைப்படுத்தப்படுகிறது.

XIX. என்னைக் கூரிஃ தன்மை யானும்
என்னைக்கு நாடிஃ தன்மை யானும்
ஆடா டென்ப வொருசா ரோரே...... (வரி 1-3)
என்னைக் கூரிஃ தன்மை – என் னைக்கு + ஊர் + இஃது + அன்மையானும்
மேலே குறிப்பிடப்பட்டுள்ள சொல்லில் ‘இஃது’ எனும் சொல்லில் இருக்கும் ஃ ஆய்த எழுத்தாக இருக்க அதன் ஈற்று எழுத்து குற்றியலுகர எழுத்தாக வந்துள்ளது. ஆக இது ஆய்தத்தொடர்க் குற்றியலுகரமாகும்.

**முடிவுரை**

இந்த ஆய்வில் ஆய்வாளர் பல சான்றுகளை எடுத்துக்காட்டியுள்ளார். ஒவ்வொரு எடுத்துக்காட்டும் ஒவ்வொரு பாடலிலிருந்தும் எடுக்கப்பட்ட எடுத்துக்காட்டுகள் ஆகும். குற்றியலுகரம் என்பது சிறிய பகுதியாக இருந்தாலும் அதனுடைய தாக்கம் தமிழ் இலக்கிணத்தில் மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. மேலும், தமிழ் இலக்கியத்தில் இருக்கும் அனைத்து பழந்தமிழர் இலக்கியத்திலும் இக்குற்றியலுகரத்தின் பங்கு இருக்கும். குறிப்பாக ஆய்வாளர் எடுத்துக்கொண்ட புறநானூறு காப்பியத்தில் பெரும்பாலும் வன்றொடர்க் குற்றியலுகரமே அதிகமாக காணப்படுகிறது. அதற்கு அடுத்து மென்றொடர்க் குற்றியலுகரம் என்று கூறலாம். அனைத்துப் பாடல்களிலும் ஒன்றுக்கும் மேற்பட்ட எடுத்துக்காட்டுகளை எடுத்துக்காட்டலாம். எனவே, இந்த ஆய்வின் வழி ஆய்வாளர் புறநானூறு பாடல்களில் இருக்கும் குற்றியலுகர புணர்ச்சியை எடுத்துக்காட்டியுள்ளார்.

**துணைநூற்பட்டியல்**


ஔவை துரைசாமிப் பிள்ளை. (2009). புறநானூறு முதல் பாகம் (மூலமும் உரையும்) (1st ed.). பூம்புகார் பதிப்பகம்.

செ. சீனி நைனா முகம்மது. (2014). நல்ல தமிழ் இலக்கணம் (2nd ed.). உங்கள் குரல் எண்டர்பிரைசு.

செ. சீனி நைனா முகம்மது. (2015). தொல்காப்பியக் கடலின் ஒரு துளி (1st ed.). உங்கள் குரல் எண்டர்பிரைசு.

Subramaniam, J., & Manonmani Devi, M. A. R. Annamalai. (2025). A study on kutriyalukaram in Thirukkural: திருக்குறளில் குற்றியலுகரம் இலக்கணத்தின் பயன்பாடு – ஓர் ஆய்வு. Malaysian Journal of Tamil, 3(1), 40–47. doi:10.1315/mjt.v3i1.108

Krishnan, P., & Manonmani Devi, M. A. R. Annamalai. (2025). A study on the usage of kutriyalukaram grammar in Arputha Thiruvandhadhi: அற்புதத் திருவந்தாதியில் குற்றியலுகர இலக்கணத்தின் பயன்பாடு – ஓர் ஆய்வு. Journal of Tamil Peraivu, 14(1), 115–120. doi:10.22452/JTP.vol14no1.13

AL, S. S., & GG, N. (2023). The usage of Eval and Viyankol verbs in Purananuru. Indian Journal of Multilingual Research and Development, 1-8. https://doi.org/10.54392/ijmrd2311

A, M. (2022). The Purathinai (External) disciplines of Tolkappiyam in the Purananuru. International Research Journal of Tamil, 4(S-8), 398-407. https://doi.org/10.34256/irjt22s855